பத்திரிகை நிருபர்களுக்கு வீடுகள்

* 2396 திரு. ஆர். அண்ணாநம்பி :

மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா ;

(அ) பத்திரிகை நிருபர்களுக்கென வீட்டுவசதி வாரியத்தின் மூலம் கட்டப்படும் அல்லது கட்டி முடிக்கப்பட்ட வீடுகளில் ஒதுக்கீடு உண்டா?

(ஆ) ஆம் எனில், இவ்வாண்டு எத்தனை சதவீதம் அவர்களுக்கு ஒதுக்கப்படும்?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) 3% (சதவீதம்) ஒதுக்கீடு அளிக்கப்பட்டு வருகின்றது.

ரயில் பாதை அமைத்தல்

* 5110 திரு. கே. பிச்சாண்டி : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழக்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

புதுவையிலிருந்து விழுப்புரம், திருவண்ணாமலை, ஜோலார் பேட்டை வழியாக ரயில்பாதை அமைக்க மாநில அரசு மத்திய அரசை வலியுறுத்துமா ?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

பாண்டிச்சேரியிலிருந்து, திருவண்ணாமலை, உத்தங்காரி, தாசம்பட்டி, கிருஷ்ணகிரி, காவேரிப்பட்டினம் வழியாக பாலக்கோடு வரை புதிய இரயில்பாதை அமைக்க போக்குவரத்து சர்வே ஒன்றினை மேற்கொள்ள இரயில்வே வாரியம் ஒப்புதல் அளித்துள்ளது.

9-30 மணி

திரு. கே. பிச்சாண்டி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுமக்களின் நீண்டநாள் கோரிக்கை இது. பொருள் போக்குவரத்துக்கு மிகவும் அவசியமான ஒன்று இது. ஆகவே, ரெயில்வே போக்குவரத்து ஆய்வினை உடனடியாக மேற்கொள்ள வேண்டுமென்று மத்திய அரசை மாநில அரசு வற்புறுத்துமா ?

1990 ஏப்ரல் 3]

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாநில அரசு இதன் தேவையை உணர்ந்து தான் ரெயில்வே துறைக்குப் பரிந்துரை அனுப்பியுள்ளது. ரெயில்வே வாரியம் ஒப்புதல் அளித்துள்ளது. இதற்கான நிதி ஒதுக்கப் பட்டவுடன் சர்வே பணி மேற்கொள்ளப்படும் என்று தெரிவித்தி ருக்கிறார்கள். விரைவில் இப்பணியை தொடங்க வேண்டுமென்று மாநில அரசு ரெயில்வே துறையை வலியுறுத்தும்.

திரு. கே. பிச்சாண்டி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகம் வழியாக புதுவையையும், கர்நாடகத்தை யும் இது குறைந்த தூரத்தில் இணைக்கும் திட்டமாகையால் திருவண்ணாமலையிலிருந்து ஜோலார்பேட்டை ஐங்சன் வரை ரெயில்வே பாதையை அமைக்கும் செயற்குறிப்பையும் மாநில அரசு வற்புறுத்துமா ?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே நான் குறிப்பிட்டதைப் போல இந்தக் கருத்தை இவ்வரசு வலியுறுத்தும்.

தங்கத் தேர் இருக்கின்ற கோவில்கள்.

* 1080 திரு. மெ. ஆண்டி அம்பலம் :

மாண்புமிகு இந்துசமய அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க் கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) தமிழ்நாட்டில் தங்கத் தேர் இருக்கின்ற கோவில்கள் எவை ?

(ஆ) இவற்றைப் பாதுகாக்க அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) தமிழ்நாட்டில் தங்கத் தேர் இருக்கின்ற கோவில்கள் மொத்தம் 12. அவை கீழ்வருமாறு:—

1. அருள்மிகு தண்டாயுதபாணிசாமி திருக்கோயில், பழனி
2. ‘‘ சுப்ரமணியசாமி திருக்கோயில், திருத்தணி.
3. ‘‘ சுப்ரமணியசாமி திருக்கோயில், திருச்செந்தூர்.
4. ‘‘ மாரியம்மன் திருக்கோயில், சமயபுரம்.
5. ‘‘ மீனாட்சியம்மன் திருக்கோயில், மதுரை.
6. ‘‘ தேவிகருமாரியம்மன் திருக்கோயில், திருவேற்காடு
7. ‘‘ சுவாமிநாதசாமி திருக்கோயில், சுவாமிமலை.
8. ‘‘ வடபழனியாண்டவர் திருக்கோயில், வடபழனி.